DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 30/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**A1 A2 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜமாணிக்கம் |
| Father / Husband Name | பிரான்சிஸ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **03.02.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செண்டிவாக்கத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 30.11.2021 ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில் எனது காலில் அடிப்பட்டு இருந்ததால் நான் எனது வீட்டில் படுத்துக்கொண்டு இருந்தேன். அப்போது சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது எனது மனைவி அம்சா என்பவர் கீழே விழுந்து கத்திக்கொண்டு இருந்தார். நான் அவரை தூக்க சென்றபோது ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை பார்த்து வாடா நொண்டி காலா என்று கூறி 1ம் எதிரி சக்கரையாஸ் அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து என்னை வெட்ட வந்தபோது எனது மனைவி என்னை இழுத்துவிட்டார். அருகில் இருந்தவர்கள் எங்களை காப்பாற்றி விட்டார்கள். 1ம் எதிரி என்னை பார்த்து என்னைக்கா இருந்தாலும் உனது சாவு என் கையில்தான் என்று கூறினார். எனக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. என் மனைவிக்கு பல் மற்றும் அவரது முகத்தில் லேசாக காயம் ஏற்பட்டது. பின்னர் என் மனைவியை அழைத்துக்கொண்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அவரது சிகிச்சைக்கு சென்றோம். நான் சுமார் 4 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. புகார் கொடுக்கும் போது நான் என் மனைவியுடன் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால ஆமாம். எனக்கு ஏற்கனவே காலில் அடிப்பட்டு நடக்க முடியாமல் இருந்தேன் என்றால் சரிதான். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கும் இடையே அருள் தாஸ் என்பவரின் காலிமனை இருந்தது என்றால் சரிதான். ஆனால் ஆஜர் எதிரிகள் எங்களுக்கு சொந்தமான இடத்தில் தான் சாணியை எடுத்துவந்து கொட்டினார்கள். மேற்படி அருள்தாஸ் என்பவரின் இடத்தை தற்போது நாங்கள் வாங்கியுள்ளோமா என்றால் ஆமாம். சம்பவம் குறித்து போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தார்கள். மேற்படி என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரித்தார்கள். சம்பவயிடத்தில் சுமார் எத்தனை

நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 7 முதல் 10 நபர்கள் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் எத்தனை வருடங்களாக சாணத்தை கொட்டினார்கள் என்றால் சுமார் 5 வருடங்கள் கொட்டினார்கள். நான் அது குறித்து சுகாதார துறைக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. நாங்கள் பல முறை சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. மேற்படி ஆஜர் எதிரிகள் அருள்தாஸ் என்பவரின் இடத்தில் கொட்டினாரா என்றால் இல்லை. எங்களுக்கு சொந்தமான இடத்தில் கொட்டினார்கள். அதனால் நாங்கள் கேட்டோம். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் ஆஜர் எதிரிகள் அவ்வாறு 4 வருடங்களாக சாணியை கொட்டியிருந்தால் அது குறித்து முன்பே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் தான் ஆஜர் எதிரிகளை அசிங்கமாக பேசி சண்டைக்கு சென்றுவிட்டு தற்போது அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கால் உடைந்து வீட்டில் இருந்ததால் எப்படி சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் குச்சியின் உதவியுடன் சம்பவயிடத்திற்கு வந்தேன். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 30/2025
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**A1 A2 எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | அம்சா |
| Father / Husband Name | ராஜமாணிக்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **03.02.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செண்டிவாக்கத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 30.11.2021 ம் தேதி காலை சுமார் 6.00 மணியளவில் எனது பக்கத்து வீட்டை சேர்ந்த 1ம் எதிரி சக்கரையாஸ் என்பவர் மாட்டு சாணத்தை எடுத்துவந்து என் வீட்டின் வாசல் அருகே கொட்டினார். அப்போது கொரானா நோய் தொற்று இருப்பதாலும் கொசு தொல்லை ஏற்படும் என்பதாலும் நான் மேற்படி மாட்டு சாணத்தை எனது வாசலில் கொட்டவேண்டாம் என்று கூறினேன். அதற்கு 1ம் எதிரி சக்கரையாஸ் என்னை பார்த்து தெவிடியா பேபர்ஸ் நான் அப்படிதான் கொட்டுவேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பிறகு அன்று மாலை சுமார் 6.00 மணியளவில் மேற்படி சக்கரையாஸ் மது அறுந்திவிட்டு எனது வீட்டிற்கு வந்து தெவிடியா வெளியே வாடி என்று அசிங்கமாக பேசினார். நான் வெளியே சென்று நாயே யாரை கேட்டாய் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என் மாராப்பு பிடித்து துணியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். அப்போது 2 ம் எதிரி சங்கீதா என்பவர் என்னிடம் உனது கணவர் நொண்டி காலன் எங்கடி என்று அவரின் இன்னொரு காலையும் உடைத்துவிடுவதாக கூறி என்து வயிற்றின் மேல் எட்டி உதைத்ததில் நான் கீழே விழுந்துவிட்டேன். எனது கணவர் என் குரல் கேட்டு குச்சியின் உதவியுடன் தாங்கி வெளியே என்னை தூக்க முயன்ற போது சக்கரையாஸ் என் கணவரை கீழே தள்ளிவிட்டார். 1ம் எதிரி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் என் கணவரை தாக்க முயன்ற போது நான் என் கணவரை பிடித்து இழுத்துவிட்டேன். நாங்கள் இருவரும் எழுப்பிய சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்து மடக்கினார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் இந்த கத்தியால் தான் உங்கள் இருவருக்கும் சாவு என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அவர்கள் என்னை கீழே தள்ளி விட்டதில் எனக்கு பல் லேசாக ஆடியது. என் கணவருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. நாங்கள் சிகிச்சைக்காக மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் கொடுத்த புகாரை யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் எனக்கு படிக்க தெரியாததால் காவல் நிலையத்திற்கு வெளியே ஒரு நபரின் உதவியுடன் நான் சொல்ல அவர் எழுதி கொடுத்தார். எனக்கும் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு இடையே அருள் தாஸ் என்பவரின் காலி மனை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மனையை அருள் தாஸ் என்பவர் என்னுடைய பெயரில் ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார். மேற்படி இடம் சம்பவத்தின் போது ஆஜர்எதிரிகளின் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். ஆனால் ஆஜர் எதிரி எங்களுக்கு சொந்தமான பூர்வீக இடத்தில் தான் சாணியை கொட்டினார். நான் தற்போது மேற்படி இடத்தை எனது பெயரில் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் எதிரி அடித்ததால் தான் எனக்கு பல் ஆடியது என்றும் எனது கணவருக்கும் இடுப்பில் அடிப்பட்டது என்றும் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் மருத்துவமனையில் இருந்தபோது 3 நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடத்தில் சுமார் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 5 நபர்கள் இருந்தார்கள்.அருள்தாஸ் என்பவரின் நிலத்தை நான் வாங்குவதற்காக ஆஜர் எதிரிகளின் மேல் பொய்யான புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று மீண்டும் ஆஜர் எதிரி என்னிடம் சண்டைக்கு வந்ததாக சொல்லியுள்ள நேரம் என்னவென்றால் மாலை சுமார் 6.00 மணியாகும். நான் தான் எதிரியை அசிங்கமாக பேசி அவரை அடித்து பொய்யாக புகாரை கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**